பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 08 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. வனப்பகுதியில் யானைகளுக்கான வாழ்விடங்களை பாதுகாக்க வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
2. ஹிண்டன்பெர்க் முதலீட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் குற்றச்சாட்டுக்களை அதானி குழுமம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.
3. ஹரியானா மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையர்கள் குழு இரண்டு நாட்கள் நேரில் ஆய்வு செய்கிறது.
4. தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்கும் நோக்கில் அனைத்து மாவட்டங்களிலும் இன்று போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.
5. பீகார் மாநிலம் ஜெகன்னாபாத் மாவட்டத்தில் கோவில் ஒன்றில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி ஏழு பேர் உயிரிழந்தனர்.

*---- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

உலக யானைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில் யானைகளை பாதுகாக்க மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

யானைகள் இந்திய நாட்டின் வரலாறு மற்றும் கலாச்சாரத்துடன் இணைந்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

யானைகளுக்கான வாழ்விடங்களை வனப்பகுதியில் பாதுகாக்க வேண்டியது நமது கடமை என்றும், அவர் உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளில் யானைளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும் திரு நரேந்திரமோடி சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக யானைகள் தினத்தையொட்டி மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் வெளியிட்டுள்ள செய்தியில், கடந்த பத்து ஆண்டுகளில் யானைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஆசிய கண்டத்தில் உள்ள மொத்த யானைகளின் எண்ணிக்கையில் 60 சதவீதம் இந்தியாவில் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக யானைகள் தினத்தை நாம் பெருமையுடன் கொண்டாடுவோம் என்றும் திரு பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஹிண்டன்பெர்க் முதலீட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் குற்றச்சாட்டுக்களை அதானி குழுமம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

தங்களது குழுமத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் நோக்கில் வேண்டுமென்றே தவறான தகவல்கள் திணிக்கப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளதாக பங்குகள் மற்றும் பரிவர்த்தனை அமைப்பிடம் எழுத்துப்பூர்வமாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே உச்சநீதிமன்றம் இந்த குற்றச்சாட்டுக்கள் அடிப்படை ஆதாரமற்றவை என்று உறுதி செய்துள்ள நிலையில், மீண்டும் இதுபோன்று தவறான தகவல்கள் தங்களது குழுமத்தின் மீது தெரிவிக்கப்பட்டிருப்பதாக அதானி குழுமம் கூறியுள்ளது.

செபி அமைப்பின் தலைவர் மாதபி புரி புஜ், அவரது கணவர் தவால் புஜ்-யும் ஹிண்டர்பர்க் குற்றச்சாட்டுக்களை திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.

தங்கள் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் இந்த தகவல் வெளியிடப்பட்டிருப்பதாகவும், அவர்கள் கூறியுள்ளனர்.

இந்திய பங்குச்சந்தை கட்டமைப்பு மீதான நம்பிக்கைக்கு பாதிப்பை உருவாக்கும் நோக்கில் ஹிண்டர்பெர்க் தவறான தகவலை வெயிட்டிருப்பதாக மியூச்சுவல் பண்ட்ஸ் அமைப்புகள் கூறியுள்ளன.

**[]<<<>>>[]**

இந்திய விண்வெளி திட்டத்தின் தந்தை என போற்றப்படும் விக்ரம் சாராபாய் பிறந்த நாளையொட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் அவரை நினைவு கூர்ந்துள்ளார்.

விண்வெளி ஆய்வு திட்டங்களில் அவரது சாதனைகள், தொலைநோக்கு பார்வையும் அரும்பணியும் என்றென்றும் நினைவு கூரத்தக்கவை என்று அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.,

தேசிய நூலகர் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி நூலகரும், கணித அறிஞருமான எஸ் ஆர் ரங்கநாதனையும் திரு எல் முருகன் நினைவு கூர்ந்துள்ளார்.

எஸ் ஆர் ரங்கநாதனின் பிறந்த நாள் தேசிய நூலகர் தினமாக கொண்டாப்பட்டு வருவதை சுட்டிக்காட்டியுள்ள அவர், புத்தகங்களைப் படிக்கும் பேரார்வத்தை நம்மிடையே தூண்டியவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

படிக்கும் ஆர்வத்தை தூண்டிய எஸ் ஆர் ரங்கநாதன் என்றென்றும் போற்றத்தக்கவர் என்று திரு எல் முருகன் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஹரியானா மாநில சட்டமன்ற தேர்தலையொட்டி தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் மற்றும் தேர்தல் ஆணையர்கள் திரு கியானேஷ்குமார், திரு சுக்பீர் சிங் சாந்து ஆகியோர் அம்மாநிலத்துக்கு இரண்டு நாள் பயணமாக இன்று செல்கின்றனர்.

அரசியல் கட்சிகள், அதிகாரிகள் மற்றும் பல்வேறு தரப்பினருடன் சட்டமன்ற தேர்தல் குறித்து அவர்கள் விவாதிக்கவுள்ளனர்.

ஹரியானா தலைமை தேர்தல் அதிகாரி திரு பங்கஜ் அகர்வால் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், தேர்தல் ஆணையர்கள் குழு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளதாகத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்தது சரியான நடவடிக்கை என்று தில்லி நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் திரு கெஜ்ரிவால் இன்று மனு தாக்கல் செய்துள்ளார்.

அவரது சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் திரு அபிஷேக் சிங்கி, இதனை அவசர வழக்காக எடுத்துக் கொள்ளுமாறு தலைமை நீதிபதி திரு சந்திரசூட்-டிடம் முறையிட்டார்.

இதற்கு பதிலளித்த தலைமை நீதிபதி, விசாரணைக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்கும் நோக்கில் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னை பல்கலைக்கழகத்தில் போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவ மாணவியர், பேராசிரியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

போதைப்பொருள் கடத்தலை தடுப்பதில் சிறப்பாக பணியாற்றிய காவலர்களுக்கு முதலமைச்சர் விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்ளிலும் இன்று போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

திருவள்ளூரில் மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி தலைமையில் பள்ளி மாணவ மாணவியர் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

திருவாரூரில் மாவட்ட ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ தலைமையில் போதைப்பொருள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

திருப்பத்தூரில் மாவட்ட ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் தலைமையில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டு, விழிப்புணர்வு பேரணியும் நடைபெற்றது.

[]<<<>>>[]

நாட்டின் 78-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தூத்துக்குடியில் உள்ள பள்ளி மாணவ மாணவிகள் இணைந்து யோகாசன பயிற்சி மேற்கொண்டவாறு தேசிய கொடியை ஏந்தி சாதனை படைத்துள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திரமோடியின் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில் இந்த யோகாசன பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

பள்ளி மாணவர்களுக்கிடையே தேசப்பற்றை வளர்க்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டதாக பள்ளியின் முதல்வர் திருமதி மீனாகுமாரி தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - முதல்வர் ) -27--- செகண்ட்*

இதில் பங்கேற்றது தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக பள்ளி மாணவி ஒருவர் கூறினார்.

*( சவுண்ட்பைட் - மாணவி ) --- 32 செகண்ட்*

[]<<<>>>[]

மேட்டூர் அணை இந்த ஆண்டில் இரண்டாவது முறையாக முழு கொள்ளளவான 120 அடியை எட்டியுள்ளது.

இதனையடுத்து 16 கண் மதகுகள் வழியாக இன்று காலை எட்டு மணி முதல் வினாடிக்கு 26 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) ---50 செகண்ட்*

[]<<<>>>[]

பீகார் மாநிலம் ஜெகன்னாபாத் மாவட்டத்தில் உள்ள பாபா சித்தேஷ்வர்நாத் கோவிலில் இன்று அதிகாலை நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி ஏழு பேர் உயிரிழந்தனர். 16 பேருக்கு காயம் ஏற்பட்டது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஜெகன்னாபாத் காவல்துறை கண்காணிப்பாளர் திரு அரவிந்த் பிரதாப் சிங், இரவு ஒரு மணி அளவில் உள்ளூர் வியாபாரிகளுக்கும், பக்தர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக பக்தர்கள் அங்குமிங்கும் ஓடியதில் நெரிசல் ஏற்பட்டதாக கூறினார்.

கோவில் வளாகம் மிகவும் இடுக்கமானப் பகுதியில் இருந்ததால் உயிரிழப்பு ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சிக்கிம் மாநிலத்துடன் நாட்டின் பிற மாநிலங்களை இணைக்கும் இந்திராணி பாலத்தை எல்லை சாலைகள் மேம்பாட்டு அமைப்பு மீண்டும் கட்டி முடித்துள்ளது.

கடந்த 2023-ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தால் இந்த பாலம் அடித்துச் செல்லப்பட்டது.

300 அடி உயரத்தில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மீண்டும் இந்த பாலம் கட்டப்பட்டுள்ளது நாட்டின் கட்டுமான பொறியியல் துறையில் சாதனையாகும்.

சிக்கிம் மாநிலத்திலிருந்து மாற்ற மாநிலங்களுக்கு செல்வதற்கு முக்கிய போக்குவரத்து பாலமாக உள்ள இந்திராணி பாலம் மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவிடும்.

***End of News***